பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 04 வெள்ளிக்கிழமை 17.01.2025 கதிர் 070

## சீனா - இலங்கை சுதந்திர வர்த்த ஒப்பந்தத்தை விரைந்து முடிக்க இரு நாடுகளும் இணக்கம்

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் ஒரு விரிவான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து நிறைவுசெய்ய இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் நான்கு நாள் சீனப் பயணம் தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தில் இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றத்தில் இரு நாடுகளும் திருப்தி அடைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, சீன இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் தொடர்புடைய சங்கங்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதில் தேயிலை, இரத்தினக்கல் மற்றும் பிற தொழில்களில் இலங்கை நிறுவனங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சி, சீன இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி, சீன- தெற்காசிய கண்காட்சி மற்றும் மின் வணிக தளங்கள் போன்ற கண்காட்சிகளில் இலங்கை பங்கேற்பதை எளிதாக்கவும், பரஸ்பர நன்மை பயக்கும் அடிப்படையில் இரு நாடுகளின் நிறுவனங்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தவும் சீனா தயாராக உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குருந்தூர்மலை வழக்கில்

## நீதிமன்றம் அழைக்கும்வரையும் ரவிகரன் வரத் தேவையில்லை

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட மூவரும் அழைப்பு விடுக்கும்வரை நீதிமன்றில் முற்படத் தேவையில்லை என முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. ☞ 2

## ரூ. 508 மில்லியன் செலவில் 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகள்

### மலையகத்தில் இந்திய உதவியில்

இந்திய அரசாங்கத்தின் 508 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் மலையக பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் நேற்று இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் மூக உட்கட்டமைப்பு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஆசிரியர்களின் ஆடைப் பஞ்சாயத்து இன்னும் தீர்ந்தபாடில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. ஆசிரியைகள் சேலை அணிந்து பாடசாலைக்கு வருவது கட்டாயம் என்று கல்வி அமைச்சு விடாப்பிடியாக நின்றது. ஆசிரியர் சங்கங்கள் இதற்கெதிராகக் குரல் கொடுத்தாலும் பொதுவாக ஆசிரியைகள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆர்வமற்றவர்கள் என்பதாலோ அல்லது ஆடை ☞ 2

## இடைக்காலத் தடை

மௌபிம உள்ளிட்ட பத்திரிகைகளை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பத்திரிகைத் தாள் விநியோக ஒப்பந்தத்தை மீறிய குற்றச்சாட்டில், முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளிட்ட சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்களைக் குற்றப் புலனாய்வு திணைக்களம் கைது செய்வதிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த இடைக்கால உத்தரவு எதிர்வரும் 21ஆம் ஆம் திகதி வரை அமுலிலிருக்கும் என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் தனியார் நிறுவனம் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்ததன் பின்னர், இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் கேசரலங்கா தனியார் நிறுவனம் உள்ளிட்ட 6 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், மனுதாரர் நிறுவனம், பத்திரிகை ☞ 2

# 3.7 பில், டொலர் சீன முதலீடு அநுரவின் பயணத்தின் பயன்

## ஒப்பந்தம் கைச்சாத்து

**ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் மூலம் 3.7 பில்லியன் டொலர் நேரடி முதலீடு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.**

**"இலங்கைக்கு 3.7 பில்லியன் டொலர் பெறுமதியான பெரும் வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற்றுக்கொடுத்து, ஜனாதிபதியின் சீன உத்தியோகபூர்வ பயணத்தின் மூன்றாவது நாள் நேற்று வெற்றிகரமாக நிறைவு" என்று அது தெரிவித்துள்ளது.**



சீனாவில் உள்ள பல முன்னணி ☞ 2

## மன்னார் காற்றாலை வழக்கு மே 23இல் விசாரணைக்கு

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் இந்திய அதானி நிறுவனத்தினால் காற்றாலை மின் நிலையத்தை உருவாக்கும் திட்டம் தொடர்பில் செய்துகொண்ட ஒப்பந்தத்தை வலுவற்றதாக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மே 23 விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

குறித்த மனுவை இலங்கை பசுமை அமைப்பின் தலைவர் சந்திம அபயவர்தன சமர்ப்பித்தார். இந்த மனுவை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ☞ 2

## மன்னார் துப்பாக்கிச் சூடு பற்றி விசாரிக்க விசேட பொலிஸ் குழுவை தருவியுங்கள்

### அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர், மேலும் இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்கு மன்னார் பொலிஸாரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாக விசாரிக்க கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் குழு வரவழைக்கப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ☞ 2

## ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

சுகாதார சேவைக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வெளியிடுதல் தொடர்பாக, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனுஜ் சி வீரசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் ஆளும்தரப்பு சுகாதார சேவைகளை சீர்குலைக்க அல்லது சீர்குலைக்கும் நோக்கத்தில் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விவகாரம் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களை புறக்கணிக்க ஐக்கி மக்கள் சக்தி முடிவு

நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களைப் புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் குழுக்களில் எதிர்க்கட்சிக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்காத காரணத்தினால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பொது நிதிக் குழுவில் மட்டுமே எங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நிதிக்குழு கூட்டம் நடைபெறுவதால் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதில் மாத்திரம் பங்கேற்பார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். ☞ 2

### துப்பாக்கிச்சூட்டு சம்பங்களால் பறிக்கப்படும்

## மனித உயிர்களைப் பாதுகாக்க உடனே நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதியிடம் எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் மூலம் பறிக்கப்படும் மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடாபில் ☞ 2

## இனி இது .....

உரிமைஅவசியமற்றது என்று கருதியதாலோ என்னவோ அதற்காகவெல்லாம் போராட்டம் நடத்தப்போகாமல் அந்த விவகாரம் அமுங்கிப் போய்விட்டது.

ஆனால் இப்போது இந்த ஆடைப் பிரச்சினையால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையம் ஒன்றை மூடவேண்டிய நிலமை ஏற்பட்டுவிட்டது. ஆசிரியைகள் எந்த ஆடையை அணிந்த விடைத்தாள் திருத்தலாம் என்பதில் ஏற்பட்ட சர்ச்சைதான் பரீட்சை நிலையம் மூடப்படுவதற்குக் காரணம் எனப்படுகின்றது.

பன்னிபிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் திறக்கப்பட்டிருந்த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்தைத்தான் இவ்வாறு மூட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை நிலையத்தை மூட நடவடிக்கை எடுத்துள்ளார்.

பாடசாலையின் ஒரு பகுதியில் உள்ள பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்திற்கு ஆசிரியர்கள் புடவை அணிந்து வரவேண்டும் எனவும் சாதாரண உடையில், குறிப்பாகச் சட்டை (கவுன்) அணிந்து வருபவர்களை விடைத்தாள் திருத்த அனுமதிக்க முடியாது எனவும் பாடசாலையின் வாயில் காவலர்கள் உறுதியாகக்கூறியதால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு இந்தத் துன்பம் ஏற்பட்டது.

காவலர்களின் இந்த நடவடிக்கையால் அங்கு இரு பிரிவினரிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தமது ஒரு பாடசாலைக்கென்று ஒழுக்கம் இருப்பதாகவும், ஆசிரியர்கள் புடவை அணிந்துதான் பாடசாலை வளாகத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்ற தமது அதிபரின் உத்தரவைவே தாம் நடைமுறைப்படுத்துகின்றனர் எனவும் காவலர்கள் விடாக்கொண்டர்களாக நின்றுகொண்டனர்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்தின் கட்டுப்பாடு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கீழ் இருப்பதால் அதற்கு அதிபர் பொறுப்பல்ல, எனவே பாடசாலையின் சட்டதிட்டங்கள் தம்மைக் கட்டுப்படுத்தாது என்று விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய வந்த ஆசிரியர்கள் வாதாடிப் பார்த்தனர். இந்த வாக்குவாதம் மெல்ல கருத்து மோதலாக வெடித்து, கொந்தளிப்பில் தள்ளுமுள்ளு ஏற்படும் நிலையை எட்டியதை அடுத்து அங்கு பொலிஸாரை அழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸாரின் தலையீட்டும் இரு பகுதியினரிடையேயும் சமரசம் ஏற்படாததால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தொலைபேசி மூலம் பரீட்சை நிலையத்தை மூன்று நாட்களுக்கு மூடுமாறு பணிப்புரை விடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆண்களுக்கும் ஆடைக்கட்டுப்பாடு, கலாசாரம் எல்லாம் பார்க்கும்போது, ஒரு பாடசாலை ஆசிரியைகளின் சேலைத் தலைப்பில்தான் தனது ஒழுக்கம் தொங்கிக்கொண்டிருக்கிறது என்று நினைப்பது குற்றமா என்ன?

.இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 3.7 பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி கைத்தொழிற்சாலைகளையும், வறுமை ஒழிப்புக்கு முன்மாதிரியான சீன கிராமமொன்றையும் ஜனாதிபதி இன்று பார்வையிடவுள்ளார்.

சிசுவான் மாகாண கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளருடனும் இன்று இடம்பெறவுள்ளது.

சீனாவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தின் மூன்றாவது நாளான நேற்று, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இலங்கைக்கு பல அனுகூலங்களைப் பெற்றுத் தரும் பல விசேட கலந்துரையாடல்களில் பங்கேற்றார். அது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் விசேட முதலீட்டு அமர்வு நடைபெற்றதோடு இதில் முன்னணி சீன நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அதன்பிறகு, உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களுடன் கூடிய நிறுவனங்கள் பலவற்றின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தினார். சீனா பெட்ரோகெமிக்கல் கூட்டுத்தாபனம்-சினோபெக் குழுமம் (China Petrochemical Corporation-SINOPEC Group) சீன தொலைத்தொடர்பு நிர்மாண நிறுவனம் (China Communications Construction Company Ltd), சீன மேர்சண்ட் குழுமம் (China Merchants Group (CMG), ஹூவாவி (Huawei), வாகன உற்பத்தித் துறையில் பிரபலமான நிறுவனமான பி.வை. டிஓட்டோ (BYD Auto) உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் அவற்றில் அடங்கும்.

சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, இலங்கைக்கு 3.7 பில்லியன் டொலர் மதிப்புள்ள பெரும் வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற்றுக் கொடுக்கும் அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை, இன்று பிற்பகல் சீன மக்கள் மாவீரர் நினைவுச் சின்னத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் இணைந்து கொண்டார்.

பின்னர் சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜியை ஜனாதிபதி சந்தித்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் சீனப் பிரதமர் லீ சியாங்கிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடந்த கால நட்புறவை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதிக்கும் சீனப்பிரதமருக்கும் இடையில் மிகவும் பயனுள்ள கலந்துரையாடல் இடம்பெற்றது. 'வளமான நாடு - அழகான வாழ்க்கையை' உருவாக்க தற்போதைய ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு சீனா ஆதரவளிக்கும் என்று சீனப் பிரதமர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனபயணத்தின் இறுதிநாளில் சீனாவில் உள்ள பலமுன்னணி உற்பத்திதொழிற்சாலைகளுக்கு ஜனாதிபதி பயணம் செய்கிறார். வறுமை ஒழிப்புக்கு முன்மாதிரியான சீன கிராமம் ஒன்றையும் அவர் பார்வையிடவுள்ளார்.

வெளிவிவகார, வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச்சேவை அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹொங், சீனாவிற்கான சினோபெக் இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டுள்ளனர் - என்றுள்ளது.

## இடைக்காலத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிடுவதற்குத் தேவையான காகிதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, பிரதிவாதியான கேசர லங்கா தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் நிறுவனத்தின் பணிப்பாளரான முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தனது அமைச்சுப் பதவியை இழந்ததையடுத்து, பிரதிவாதியான கேசர லங்கா நிறுவனம் உரிய உடன்படிக்கையின் விதிமுறைகளை மீறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பாக எதிர்தரப்பு நிறுவனம் பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் கைது செய்யப்படும் அபாயம் உள்ளதால், அவர்களைக் கைது செய்ய இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

## நீதிமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை இந்தவழக்குடன் தொடர்புடைய நபர்களை வழக்குத் தவணைக்கு வராத நிலையில் அவர்களை மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு நீதிமன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

குருந்தூர்மலையில் 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு சேர்ந்துகலந்துகொண்டமைக்காக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மயூரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

தொல்லியல் திணைக்களத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், மயூரன் உள்ளிட்ட மூவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். வழக்கினை ஆராய்ந்த நீதவான், மன்றுக்கு வந்திருந்த மூவரும் நீதிமன்றால் அழைப்புவிடுக்கும்வரை, நீதிமன்றில் முற்படத் தேவையில்லை என உத்தரவிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் ஆளும்தரப்பின் முடிவுகளுக்கமையவே எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற குழுக்களைப் புறக்கணிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

2025ஆம் ஆண்டு தொடங்கி, 16 நாட்களில் மாத்திரம் 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருப்பது பாரதூரமான நிலமை என்பதை நான் முதலில் சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்தத் துப்பாக்கிச் சூடுகளில் 5 பேர் உயிரிழந்து, மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் சிவில் பிரஜைகள் தமது அன்றாட நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்கள புள்ளிவிவரங்களின்படி, வெளிநாடு சென்றுள்ளவர்களில் 188 பேருக்கு சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளஷது. இவர்களில் 63 பேர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு பாதாள உலகச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் கொலை, கப்பம், மிரட்டல் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருநாட்டின் குடிமக்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டுவது எந்த ஒரு ஆளும்தரப்பினதும் முதன்மைப் பணியாகும். இது பாதுகாப்புச் சார்ந்ததாக இருக்கலாம், மனித உரிமைகளைப் பாதுகாப்பது சார்ந்ததாக இருக்கலாம், சுகாதாரத்துறை சார்ந்ததாக இருக்கலாம், உணவு மற்றும் ஊட்டச்சத்து சார்ந்தனவாக இருக்கலாம், இந்தப் பொறுப்பை எல்லா வகையிலும் நிறைவேற்றுவது அந்தத் தருணத்தில் இருக்கும் ஆளும்தரப்புக்குத் தலைமை தாங்குபவர்களின் பணியாகும்.

மன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக இன்று (16) இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான பரிதாபகரமான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நான், ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய ஆளும்தரப்பிடமும் மற்றும் அனைத்து பாதுகாப்புப்படைப் பிரதானிகளிடமும் தயவு கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிலை அதிகரிக்குமானால், அது சாதாரண மக்களின் வாழ்க்கைக்கும், மக்கள சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தடங்கலாக இருக்கும். எனவே, இந்த பாதாள உலக செயற்பாடுகளை உடனடியாக ஒழிப்பதற்கும், வெளிநாடுகளில் இருந்து கொண்டு இவற்றை வழிநடத்தும் நபர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் எதிர்க்கட்சிக்கு தலைமை வகிக்கும் நபர் என்ற வகையில் நானும், எனது எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவும் இதற்குத் தேவையான ஆதரவை வழங்க தயாராக இருக்குகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் - என்றுள்ளது.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது. காட்டுமிராண்டித்தனமானது. இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸாரே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது.

இந்த விடயத்தை கடந்த ஆளும்தரப்பில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாகப் பேசியிருந்தேன். காரணம் துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது .

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியப்படுத்தப்படவில்லை. இந்த துப்பாக்கிச் சூடு நொச்சிகுளம் மக்கள் மீதுதான் நடத்தப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிஸாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலிலே மீண்டும் மன்னார் நீதிமன்றத்திற்கு முன் இந்தப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே இது கண்டிக்கத்தக்கது.

இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியினது கவனத்திற்கும், நாடாளுமன்ற கவனத்திற்கும் கொண்டு வரவுள்ளேன். ஏனென்றால் இது தொடர்ச்சியாக நடைபெறுகிற விடயமாக இருக்கிறது.

போன உயிர்களை மீளப் பெற முடியாது. துப்பாக்கிச் சூட்டால் உயிர் நீத்த குடும்பங்கள் பல உள்ளன. அந்த கிராம மக்கள் அச்சத்தோடு வாழுகின்ற நிலைமை தொடர்கின்றது. ஆகவே இதன் முழுப்பொறுப்பையும் பொலிஸார் எடுக்கவேண்டும். இந்தச் சம்பவத்திற்குக் காரணம் பொலிஸாருடைய கவனயீனம் அசமந்தப்போக்கு என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக்கையில் இருக்கும் நிலையில் போன்று காட்டிக்கொண்டு இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டவேண்டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வுதுறை நடவடிக்கைகளை பொலிஸார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்க வேண்டும். மன்னாரில் உள்ள பொலிஸாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளை செய்து கொள்வது முடியாத காரியமாகும். எனவே கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் குழு வரவழைக்கப்பட்ட வேண்டும்.

இந்த சம்பவத்தில் உயிர்நீத்தவர்களுக்கு எனது அஞ்சலியை செலுத்துவதுடன் பொலிஸார் அதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை. என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரூ. 508 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளராக பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள நுவரெலியாவில் உள்ள 48 பாடசாலைகளிலும், கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா 6 பாடசாலைகளிலும் மாணவர்களுக்காக 60 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாடசாலைகளில் அறிவாற்றலை மேம்படுத்தும், மாணவர்களுக்கு கற்றல் பலன்களை கொண்டு வந்து தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காற்றாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.யூ.பி. கரலியத்தவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தத்திட்டம் தொடர்பான பலமுக்கியமான வழக்குகள் எதிர்வரும் மார்ச் மாதம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். அதன்பின்னர், சம்பந்தப்பட்ட மனுவை மே 23 ஆம் திகதி பரிசீலிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். ரயில் வீதியில் அமையவுள்ள வெள்ள வாய்க்கால் ஆபத்தானதா?

## குழப்பத்தில் மக்கள்

யாழ்ப்பாணம் ரயில் நிலைய வீதியில் புதிதாக வெள்ள வாய்க்கால் ஒன்றை அமைக்கும் பணி இடம்பெற்று வருவதால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் வெள்ள வாய்க்கால் ஒன்று ஏற்கனவே உள்ள நிலையில், அது முறையான பராமரிப்பு சீராக்கல் இல்லாமையால் நுளம்பு பெருகும், குப்பைகள் கொட்டும் இடமாக மாறியுள்ளது.

யாழ்.மாநகரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளபோதும், வாய்க்காலை சீராக்கம் செய்வது ஒரு கண்துடைப்பு நிகழ்வாக நடைபெற்று வருகிறது. இதனால் அவ்வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ள இடமானது நோய்கள் பரவும் அபாயத்தில் காணப்படுகிறது.

அதே பகுதியில் மற்றுமொரு வெள்ள வாய்க்கால் அமைப்பது முறையானதா என்பது தொடர்பில் ஆராய்ந்து, ஆய்வு செய்து, தீர்மானிக்குமாறு பொதுமக்கள் கோரியதையடுத்து, அரச சார்பற்ற நிறுவனமான கட்டட நிர்மாணத்துறையின் பொறியியலாளர் சி.உருத்திரலிங்கம் நேரில் விஜயம் செய்து ஆய்வு செய்ததுடன் மக்களுடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது ஏற்கனவே வெள்ள வாய்க்காலின் ஊடாக நீர் வழிந்தோடுவதையும் அங்கு குப்பைகள் குவிந்திருப்பதையும் பொறியியலாளர் பார்வையிட்டார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'கிளின் சிறிலங்கா' என்பது இதுவாகத்தான் இருக்குமா என்று கேள்வி எழுப்பியதோடு, இவ்விடயம் குறித்து யாழ். மாநகர சபையிடம் தான் கேட்டறியவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த மழையால் அப்பகுதிகளிலும் அண்மித்த பிரதேசங்களிலும் வெள்ள நீர் தேங்கி, வழிந்தோட முடியாமல் காணப்பட்டது. அதன்போது வீட்டு மதில்கள் நிலத்தோடு சேர்த்து உடைக்கப்பட்டும், மோட்டார் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுமே வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது.

தற்போது வெள்ள வாய்க்கால் அமைக்கப்படும் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதில்லை. நின்றாலும் மறுநாள் வற்றிவிடுகிறது.

வெள்ள வாய்க்கால் அமைப்பதில் பாதிப்புகள் இல்லையென்றாலும் முறையான இடத்தில் முறையாக அமைக்கப்பட வேண்டும் என்பது முக்கிய விடயமாகிறது.

அப்பகுதியில் இனிவரும் நாள்களில் அமைக்கப்படவுள்ள வெள்ள வாய்க்காலால் வெள்ள நீர் வழிந்தோடுமா அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் வெள்ள வாய்க்கால் போல் நீர் வழிந்தோட வழியின்றி, நோய்கள் பரவும் இடமாக இதுவும் மாறிவிடுமா என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது. - என்றார்.





## யாழ். நெல்லியடியில் செப்பு கம்பிகளுக்காக அறுக்கப்படும் தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம் , நெல்லியடி பகுதிகளில் , செப்பு கம்பிகளை திருடுவதற்காக தொலைபேசி இணைப்பு வயர்களை இனம் தெரியாத நபர்கள் அறுத்து செல்வதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொலைபேசி இணைப்பு வயர்கள் அறுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 08 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அறுக்கப்பட்ட வயர்களின் பெறுமதி சுமார் 12 இலட்ச ரூபாய்க்கும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.





## தோப்புக்காடு தொண்டர் சபையின் கல்விச் சேவை ஆரம்ப விழா நிகழ்வு

காரைநகர் தோப்புக்காடு தொண்டர் சபையின் கல்விச் சேவை ஆரம்ப விழா புதன்கிழமை காரைநகர் தோப்புப்காடு சுப்பிரமணிய ஆலய முன்றிலில் தோப்புப்காடு தொண்டர் சபை தலைவர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கல்வி நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

புலம்பெயர் தமிழர்களின் நிதி அனுசரணையில் இந்த கல்வி நிலையம் நடத்தப்படுகிறது.



பல்வேறு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழும் மாணவர்களுக்கு இந்த கல்வி நிலையம் ஊடாக இலவசமாக கல்வி வழங்கும் முயற்சியை பாராட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், இந்த பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைய வீதிப் புனரமைப்பு மற்றும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கண்டு தருவதாகவும் உறுதியளித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# துப்பாக்கி வன்முறைக்கு எப்போது முடிகட்டப்படும்?

மன்னாரில் நீதிமன்றத்தின் முன்பாக வைத்தே இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை அதிர்ச்சியூட்டுகிறது. அதுவும் இரட்டைக் கொலைகள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக வந்தவர்களே கொல்லப்பட்டுள்ளனர் என்பது மேலும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கைகடந்தசிலஆண்டுகளாகஇதுபோன்றஆயுதவன்முறைகளின் அதிகரிப்பால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. போர் முடிந்த காலத்தில் மீண்டும் துப்பாக்கி வன்முறை அதிகரித்து வருகின்றன, இந்தச் சம்பவங்கள் வெறுமனே பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களாக மட்டும் இல்லாமல் பகை தீர்க்கும், பழிவாங்கும் தனி மனித மோதல்களின் விளைவாகவும் வருவது மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

துப்பாக்கி வன்முறை மீண்டும் மீண்டும் எழுச்சி பெறுவதும், சில குற்றவாளிகள் தண்டனையின்றித் தப்பிவிடுவதும் நாட்டின் சமூக, நிர்வாக மற்றும் அரசியல் கட்டமைப்பில் உள்ள ஆழமான விரிசல்களைக் குறிக்கிறது. பல்கிப் பெருகியுள்ள இந்த வன்முறைக் கலாசாரத்தை ஒழிக்கப் புறப்பட்டுள்ளோம் என்று கடந்த ஆட்சிக் காலத்தில் காவல்துறையினர் பெரும் பரப்புரையுடன் ஒரு நடவடிக்கை மேற்கொண்டனர். நாளாந்தம் நூற்றுக்கணக்கில் கைதுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயத்திலேயே ஒருபக்கம் நிறுத்த முடியாது இந்தக் கொலைகளும் தொடர்ந்துகொண்டே இருந்தன. எனவே இதுபோன்ற குறுகிய, இளகிய நடவடிக்கைகளால் பயனேதும் இல்லை என்பது வெளிப்படையானது.

இத்தகைய துப்பாக்கி வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் அரச நடவடிக்கைகள்பெரும்பாலும் குறுகிய காலமே நீடிக்கும். அதுமட்டுமல்லாமல் அத்தகைய குற்றத்திற்கான மூல காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை. பொலிஸார் மீதான நம்பிக்கையின்மை, நீதி கிடைப்பதில் காணப்படும் தாமதங்கள், பல ஆண்டுகளாகக் காணப்படும் பொருளாதார உறுதியற்ற தன்மை, வளர்ந்து வரும் வறுமை என்று பல்வேறு சிக்கல்களும் இந்தப் பிரச்சினையை மேலும் கடுமையாக்கியுள்ளனன. இன்று துப்பாக்கி வன்முறையைக் கட்டுப்படுத்துவது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக மாறியுள்ளது. அது பாதாள உலகக் குழுக்களைக் கடந்து தனி மனித பழிவாங்கலுக்கான ஆயுதமாகவும் ஊடுருவத் தொடங்கியிருப்பது சமூகத்தில் புற்றுநோய் பீடித்திருப்பதன் அறிகுறி.

காவல்துறையின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டில் மட்டும், 103 இலக்கு வைக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன, அவற்றில் 56 மட்டுமே ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை. அதாது பாதாள உலகக் குழுக்களால் நிகழ்த்தப்பட்டவை. இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 61 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

2024இல் இடம்பெற்ற மீதமுள்ள 47 துப்பாக்கிச் சூடுகளுக்கும் குடும்பத் தகராறுகளே காரணமாக இருப்பதாகத் தரவு காட்டுகிறது. மன்னார் சம்பவமும் அத்தகைய குடும்பத் தகறாறின் விளைவானதே. தரவுகளின்படி, 2023 இல் 120 துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன, இதன் விளைவாக 64 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 65 பேர் காயமடைந்துள்ளனர். இந்த ஆண்டு தொடக்கமே துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரத்திலேயே திணறடிக்கத் தொடங்கியிருக்கிறது. கடுமையான கவலையை ஏற்படுத்துகிறது. தை மாதத்தில் இதுவரை 7 துப்பாக்கிச் சூட்டுச் சாவுகள் பதிவாகியுள்ளன.

இந்த துப்பாக்கி வன்முறையில் பெரும்பாலானவை இலங்கையின் அதிகார வரம்பிற்கு வெளியே, வெளிநாடுகளில் வசிக்கும் குற்றவாளிகளால் திட்டமிடப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை என்று காவல்துறை கருதுகிறது. வெளிநாடுகளில் இருந்து செயல்படும் குற்றவாளிகளுக்கு, முக்கியமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தியா மற்றும் கனடாவில், இலங்கை 63 இன்டர்போல் சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதாக காவல்துறை சுட்டிக்காட்டியுள்ளது. இருந்தாலும் நேற்று மன்னார் நீதிமன்றம் முன்பாக இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி சட்டவிரோத ஆயுதங்களின் வியாபாரம் மற்றும் பயன்பாடு தொடர்பாக இலங்கைக்கு அடிக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணி.

காவல்துறையின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில், அவர்களின் நடவடிக்கைகளின் விளைவாக 37 கைத்துப்பாக்கிகள், 36 ரிவால்வர்கள், ரி–56 தன்னியக்கத் துப்பாக்கிள் 20 மற்றும் ஷொட் கன்கள் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் உள்ளிட்ட 2,200 க்கும் மேற்பட்ட பிற வகையான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது பாராட்டத்தக்கது என்றாலும் இலங்கை சட்டவிரோத ஆயுதங்களால் எதிர்கொள்ளும் ஆபத்தின் அளவையும் இவை கட்டியம்கூறுகின்றன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இது தொழில்முறை குற்றவாளிகளின் விஷயம் மட்டுமல்ல என்பதை அதிகாரிகள் கவனத்தில்கொள்ளவேண்டும்

கடந்த தசாப்தத்தில், இலங்கையில் சட்ட அமலாக்கத்தில் உள்ள இடைவெளிகள், பயனுள்ள வழக்குத் தொடரல் இல்லாமை, சிறைச்சாலை மற்றும் பிற சீர்திருத்த அமைப்புகளில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றை நிபுணர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இதுமே இன்றைய நிலமைக்குக் காரணம் என்பதை ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்தச் சூழலில், ஆளும்தரப்பு இந்த விடயத்தைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும், முந்தைய ஆளும்தரப்பு செய்ததுபோல் நாடக அல்லது தற்காலிக நடவடிக்கைகளை நாடக்கூடாது.

துப்பாக்கி வன்முறைக்குப் பின்னால் உள்ள மூல காரணங்களை நிவர்த்தி செய்ய ஆளும்தரப்பு நன்கு திட்டமிடப்பட்ட வழிமுறையை வகுத்து, இந்த பிரச்சினையை மிகவும் நிலையான மற்றும் பயனுள்ள முறையில் சமாளிக்கக்கூடிய நீண்டகால கொள்கைகளைச் செயல்படுத்தவேண்டும்.

# இளிச்சவாயர்களா, என்ன?

**என் சத்திய மூர்த்தி**

தமிழில் 'குரு சிஷ்யன்' திரைபடத்தில் ஒரு காட்சி உண்டு. ஊழல் பொலிஸ் அதிகாரிவினுசக்ரவர்த்தியின்மனைவியாக நடித்த ஆச்சி மனோரமா, திருட்டு பொலிஸாராக நடித்த ரஜினிகாந்த், பிரபு ஆகியோரிடம்'நாம எல்லோருமே ஒரே இனம்' என்று நன்றாகவே வழிவார். ஆனால், தனது முயற்சியில் வெற்றி பெறமாட்டார்.

தற்போது, சென்னையில், தமிழ் நாடு அரசு முன்னெடுத்து நடத்திய 'தமிழணங்கே' நான்காம் ஆண்டு நிகழ்வுகளுக்குசென்றுதிரும்பியஇலங்கை தமிழ் தலைவர்களுக்கெல்லாம் 'குரு சிஷ்யன்' மனோரமாவின் அனுபவமே மிஞ்சி இருக்கும். தங்களது சென்னைப் பயணத்தில்அவர்கள்வெற்றிபெற்றார்கள் என்று கருதினால், அவர்கள் இன்னமும் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் அங்குள்ள அரசியல்வாதிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே யதார்த்தம்.

இங்குள்ளவர்களைபொறுத்தவரையில், தமிழ் நாடு இன்னமும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் கீழ் இருக்கிறது. அதுவும் எந்த எம்.ஜி.ஆர்.? விடுதலை புலிகள் இயக்கத்திற்கு நான்கு கோடி ரூபாய் அளித்தாரே அந்த எம்.ஜி.ஆர்தான்,

பின்னர் ஒரு காலகட்டத்தில், இந்தியாவின் மத்திய அரசு, உத்தரவிட்டபோது, அதே எம்.ஜி.ஆர். அரசு, விடுதலை புலிகளின் ஆயுதங்களையும் பறிமுதல் செய்தது. பிரபாகரனையும் கைது செய்து சிறையில் அடைத்தது. தொடர்ந்து அவரையும் பிற போராளி குழு உறுப்பினர்களையும் விடுதலை செய்தபோது அவர்கள் அணைவரிடமிரும் பறிமுதல் செய்த ஆயுதங்களை விடுதலை புலி அமைப்பிற்கே கொடுத்தது என்பது வேறு விடயம்.

அதற்கு, விடுதலை புலிகள் அமைப்பின் மீது எம்.ஜி.ஆருக்கு இருந்த மதிப்பு மற்றும் பிரபாகரன் மீதான தனி ஈர்ப்பு காரணமாக இருந்தது என்று இன்னமும் யாராவது கருதுவர்களேயானால், அது அவர்களது அறிவீலிதனத்தையே காட்டுகிறது. உள்நாட்டு அரசியலில், கருணாநிதி மீதிருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக, அவரை ஆதரித்ததாக எம்.ஜி.ஆர். கருதிய போராளி குழுக்களை பழிவாங்கும் நடவடிக்கையாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

விடுதலை புலிகள் அமைப்பும், எம்.ஜி.ஆர்ரிடம் முதலிலேயே கை நீட்டி பணம் வாங்கிய பிறகு, கருணாநிதி அழைப்பு விடுத்த 'டெஸோ' மாநாட்டில் பங்குபெறுவது ஏற்புடையது அல்ல என்று கருதிச் செயல்பட்டது. இந்த இரண்டிலும் எங்கு வந்தது எம்.ஜி.ஆர். என்ற தலைவரின் தமிழ் ஆதரவு நிலமை? அல்லது விடுதலை புலிகள் அமைப்பிற்கான அவரதுதனிப்பட்ட மதிப்பு-மரியாதையா?

### அனுதாபம் , ஆதரவு

இல்லையென்று சொல்லாமல், ஒரு காலகட்டத்தில்,இலங்கையில் இருந்து கடலை துச்சமாக கருதி, ஓட்டை -உடைசல் படகுகளில் உயிரை கையில் பிடித்துக்கொண்டு தமிழ் நாட்டை சென்றடைந்த அகதிகள் மீது மாநிலம் தழுவிய அனுதாபம் இருந்தது. அதுவே, ஓரளவிற்கு ஆதரவாகவும் மாறியது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், முந்தைய தசாம்சத்தில் இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களில் வங்கதேச அகதிகளை கையாண்டதில் கிடைத்த அனுபவத்தின்காரணமாக,இலங்கைதமிழ் அகதிகள்விடயத்தில்,மத்திய அரசும்மாநில அரசும் புதிய உத்தியை கையாண்டன. அதன் காரணமாக, இங்கிருந்து, தமிழ் நாட்டில், இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சென்றடைந்த அகதிகளை, மாநிலம் முழுவதும் மாவட்டம் தோறும் முகாம்களை அமைத்து அங்கு பரவலாக குடியேற்றின.

இதன்மூலம்இந்திய அரசதரப்பினருக்கு ஒரே இடத்தில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளுக்கு முகாம்கள் அமைப்பது, அவர்களது உணவு முதலிய அத்தியாவசிய தேவைகளைகையாளுவது முதலிய பணிகள் இலகுவாயின. ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று. நான்கு அகதிகள் முகாம்கள். அங்கெல்லாம், சில ஆயிரம் அகதிகள்.

இது இவ்வாறென்றால், மாநிலம் முழுவதும் இலங்கை தமிழ் அகதிகள் பரப்பி குடியமர்த்தப்பட்டதால், அனைத்து மாவட்டங்களிலும், ஏன், அண்டைபுற கிராமங்களில் எல்லாம், இங்குள்ள அவலநிலை புரிய வந்தது. அதன் காரணமாகவே, அவர்களுக்கான அனுதாபம் பரந்து, விரிந்து, வீரியம் கொண்டது.

### உண்ட வீட்டிற்கு

இவை எல்லாமே, ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்னர்தான். எப்போது, புகலிடம் தேடி வந்த விடுதலை புலிகள் அமைப்பினர், தங்கள் நாட்டின் இளம் தலைமுறை தலைவர் ஒருவரை, திட்டமிட்டு படுகொலை செய்து விட்டார்களோ, அப்போதே இலங்கை அகதிகள் மற்றும் அவர்களது இனப்பிரச்சினை மீதான அனுதாபமும் ஆதரவும், அடங்கா கோபமாக மாறியது.

இதன் காரணமாக, இலங்கைத் தமிழர்கள் அனைவருமே உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தவர்களாகவே பார்க்கப்பட்டனர். அடுத்தடுத்த தலைமுறைகள் தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்துவிட்டாலும் அவர்களும் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ் இன அடையாளம் ஆகியவற்றில் அதீத பெருமை கொண்டாலும், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தை அவற்றில் இருந்து விலக்கி பார்க்க தொடங்கி, நீண்ட காலம் ஆகிவிட்டது.

இந்த குறிப்பிட்ட விடயம் குறித்து இங்குள்ளவர்கள்தொடர்ந்துசெய்துவரும் தவறே இதுதான். எப்போதெல்லாம் ராஜீவ் காந்தி படுகொலை குறித்து தமிழ் நாட்டில் பேச்சு எழுகிறதோ, அப்போதெல்லாம் இந்திய அமைதி படையினர் குறித்து குற்றச்சாட்டுகள் இங்கிருந்து முன் வைக்கப்படுகின்றன. முதலாமது, மக்களின் எண்ணவோட்டம் குறித்தது. இரண்டாமது, அரசு சார்ந்த விடயம்.

ஆனால், அந்த இரண்டையும் குழப்பிக் கொண்டிருப்பதால், இங்குள்ளோருக்கு தமிழ் நாட்டு மக்களின் மனமாற்றம் குறித்து சரியாகப் புரிவதில்லை.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# இளிச்சவாயர்களா...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

போதாதற்கு, அவர்களை ஒருதலைபட்சமாக யோசிக்கவிட்டு, புலம்பெயர்ந்தோரில் சில குழுக்கள் அரசியல் வியாபாரம் செய்கின்றன. அதனால் விளையப்போகும் பயன் ஒன்றுமில்லை.

### துரோக செயல்

இங்குள்ளவர்கள் ஒரு விடயத்தை இன்னமும் நினைவுகூரவேண்டும். ராஜீவ் காந்தி படுகொலையை தொடர்ந்து தமிழ் நாட்டில் நிலவிய அசாதாரண தேர்தல் அரசியல் நிலைமை இன்றளவும் தொடருகிறது. அன்று, 1991ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றம் மற்றும் தமிழ் நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல்களில், இன்றைய ஆளும் கட்சியான திமுக படுதோல்வி அடைந்தது. கட்சி தோன்றிய 1949ஆம் ஆண்டு தொடக்கம், அதுவரை கண்டறியாத பெரும் அடி.

இதற்கும் காரணம் இருந்தது. முந்தைய முதலமைச்சர் கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சி காலத்தில், தலைநகர் சென்னையில், விடுதலை புலிகள் அமைப்பினர் தமது தாக்குதலால் ஈபிஆர்எல்எப் தலைவர் பத்மனாபா மற்றும் அவருடைய சகாக்களையும் பட்டபகலில் படுகொலை செய்தனர். அவர்கள் அதற்கான தைரியம் பெற்றது, கருணாநிதி ஆட்சியின் மானசீக ஆதரவினால்தான் என்ற கருத்து பொதுவாக நிலவியது.

தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில், எம்.ஜி.ஆர். மறைவிற்கு பின்னர், விடுதலை புலிகள் அமைப்பு, அவரது பரம எதிரியான கருணாநிதியுடன் கை கோர்த்ததை அவர்களின் மற்றுமொரு துரோக செயலாக மட்டுமே கருதினார்கள். அதனுடன் ராஜீவ் காந்தி படுகொலையும் சேர்ந்துகொள்ள, 1991ஆம் ஆண்டு தேர்தலின் திமுக-வையும் கருணாநிதி தலைமையையும் வைத்து செய்தார்கள்.

இந்த சந்தேக மனப்பான்மை, இனப்போரின் இறுதி கட்டம் வரை தொடர்ந்தது. இல்லையென்றால், போரின் உச்சக்கட்டத்தில், இந்தியாவின் 2009ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில், இனப்பிரச்சினைக்கு ஆதரவாக தொடர்ந்து குரல் எழுப்பி வந்த வைகோ-வை படுதோல்வி அடையச் செய்திருக்கமாட்டார்கள். தமிழ் நாடு வாக்காளர்களை பொறுத்தவரையில், வைகோ, ஒட்டுமொத்த இந்தியாவின் துரோகியாகவே சொந்த மாநிலமான தமிழ் நாட்டிலும் பார்க்கப்பட்டார்.

அன்று 1991 மற்றும் 2009ஆம் ஆண்டு தேர்தல்களில் விடுதலை புலிகள் அமைப்பின் ஆதரவு நிலை எடுத்த தமிழ்நாடு அரசியல் தலைமைகளின் முடிவை அங்கு யாரும் இன்னமும் மறக்கவில்லை. குறிப்பாக, ஆளும் திமுக மற்றும் முக்கிய எதிர்கட்சியான அஇஅதிமுக ஆகிய கட்சிகள், தாங்கள் ஆட்சியில் இருக்கும்போதும் சரி, எதிர்கட்சியாக செயல்படும்போதும் சரி, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், இந்தியாவின் மத்திய அரசின் வழிகாட்டுதல்களுக்கு அதனை விட்டுவிட்டனர்.

மற்றபடி, அங்கு கும்பலாக நின்று கூச்சலிடும் அரசியல்வாதிகளை மக்கள் கண்டுகொள்வதில்லை. இல்லையென்று சொல்லாமல், அங்கும் இனப்பிரச்சினைக்கும், இல்லாதாக்கபட்ட விடுதலை புலிகள் அமைப்பின் தலைமைக்கும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மானசீக ஆதரவாளர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை பூதாகரமான அரசியல் சக்திகளாக காட்டி, புலம்பெயர்ந்தோரில் பலரும் அவர்கள் மீது 'பெட்' கட்டி, தொடர்ந்து படுதோல்வி அடைந்து வருகிறார்கள்.

### மண் குதிரையை நம்பி

இனப்பிரச்சினை குறித்த, தற்போதைய தமிழ் நாடு முதல்வர் மு க ஸ்டாலினின் நிலைபாடும் இதுதான். அதாவது, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை மத்திய அரசு பார்த்துக்கொள்ளட்டும். தன்னளவிலும் தனது கட்சி மற்றும் அரசு அளவிலும், உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் இலங்கை தமிழ் அரசியல் தலைமைகளை நம்பி களத்தில் இறங்க வேண்டாம். அது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியவனின் கதையாகவே முடியும்.

முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான மாநில அரசோ அல்லது ஆளும் திமுக கட்சியோ, இனப்பிரச்சினை விடயத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் எத்தனை முறை அறிக்கைகள் விட்டுள்ளன? ஏதாவது போராட்டம் நடத்தி உள்ளனவா? நடத்தாது. காரணம், இங்குள்ள தமிழ் தலைமைகள் மற்றும் அவர்களது ஒற்றுமை குறித்த விடயங்களில் அவர்களுக்கு கிடைத்துள்ள விடய விவரங்கள்தான்.

இது போதாது என்று, தமிழ் நாட்டு மக்கள் எப்போதுமே, உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களை மட்டுமே கருத்தில் கொண்டு வாக்களிக்கிறார்கள் என்ற எண்ணம் அங்குள்ள அரசியல் தலைமைகளுக்கு நன்றாகவே புரிந்துள்ளது. ராஜீவ் காந்தி படுகொலைகூட, இனப்பிரச்சினை மற்றும் இரு நாட்டு உறவுகள் குறித்த விடயமல்ல. மாறாக, உள்நாட்டு சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்த அத்தாட்சியும்கூட.

தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது இனப்பற்றும் அதிலிருந்து எழுவதாக இங்குள்ளவர்கள் கருதும் இலங்கை இனப்பிரச்சினையும் வேறுவேறு விடயங்கள். இதனைப்புரிந்துகொள்ள மற்றொரு உதாரணமும் உள்ளது.

தமிழ் நாட்டு மக்கள் பொதுவாகவே கடவுள் பக்தி மிக்கவர்கள். தினம்தோறும் கோவில்களுக்கும், தேவாலங்களுக்கும் மசூதிகளுக்கும் சென்று கடவுளை வழிபடுபவர்கள். இது ஒரு புறமிருக்க, அரசியல் ரீதியாக, 'கடவுள் எதிர்ப்பு' கொள்கையை முன் வைத்து அரசியல் செய்யத் தொடங்கிய திமுகவையும் வெகுவாக ஆதரிப்பவர்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில், கடவுள் நம்பிக்கை என்பது தனி மனித விடயம். தேர்தல் அரசியல் என்பது மாநில உரிமைகள் மற்றும் ஆட்சிமுறை குறித்த விடயம். இத்தகைய, புகையிரத தண்டவாளம் போன்ற இணை பாதைகளையே தமிழ் நாட்டு மக்களும் அவர்களின் அரசியல் தலைமைகளும் இனம், மொழி மற்றும் இலங்கை இனப்பிரச்சினை விடயங்களில் கடைபிடிக்கின்றன.

இது இங்குள்ளவர்களுக்குப் புரிவதில்லை. அல்லது புரியாததுபோல் நடிக்கிறார்கள்.

பழையதை எல்லாம் விட்டுவிடுவோம். கடந்த நான்காண்டு, முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில், இலங்கை தமிழ் தலைவர்களில் எத்தனை பேர் அவரை சந்திப்பதற்கு நேரம் கேட்டு இரகசியமாக கடிதம் எழுதி, அதற்கான அத்தாட்சி கடிதம்கூடக் கிடைக்கப்பெறாமல் காத்திருக்கிறார்கள்? இவர்களில் எத்தனை பேர், அஇஅதிமுக தலைவர் எடப்பாடி பழனிசாமியை காண முயற்சித்து வெற்றி அடைந்துள்ளார்கள்?

இங்குள்ளவர்கள் இனியாவது ஒரு விடயத்தை புரிந்துகொள்ளவேண்டும். 'தமிழணங்கு' போன்ற தமிழ் நாடு அரசு நிகழ்த்தும் நிகழ்வுகளுக்கு மட்டும்தான், இங்குள்ள தலைவாகள் அழைக்கப்படுகிறார்கள். அங்கு அவர்கள் மாநில அரசின் பிற விருந்தினர்களை போல பொத்தாம் பொதுவாகத்தான் நடத்தப்படுகின்றனர்.

மற்றபடி, முதலமைச்சர் ஸ்டாலினுடன் 'செல்பி', அவரது சகோதரியும் திமுக நாடாளுமன்ற உறுப்பினரான கனிமொழியுடன் கலந்துரையாடல் எல்லாம் அவ்வளவுதான். அவை அனைத்துமே சபை மரியாதையின் ஒரு பகுதிதான். அல்லது, திமுக தலைமைக்கு இங்கிருந்து கிடைக்கும் மேலும் ஒரு விடயதானம்தான்.

இது இவ்வாறிருக்க, எப்போது இங்குள்ளவர்கள் இனப்பிரச்சினையையும் மீனவர் பிரச்சினையும் தனித்தனியாக பார்க்க துவங்கி விட்டார்களோ, எப்போது 'நன்றி மறந்து' தமிழ் நாடு மீனவர்களுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்களோ, அங்கே, தமிழ் நாட்டு மக்கள் மட்டும் இளிச்சவாயர்களா, என்ன? இந்த எண்ணவோட்டமும் அங்குள்ள அரசு மற்றும் அரசியல் தலைமைகளை பாதித்துள்ளது என்பதே அப்பட்டமான உண்மை.

# அம்பாறையில் பலத்த மழை வெள்ளத்தால் வயல் நாசம்

## விவசாயிகள் கவலை



அம்பாறை டீ.எஸ்.சேனாநாயக்க நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவிடப்பட்டபோதும் இடைவிடாத பலத்த மழை காரணமாகவும் அப்பகுதியில் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று அம்பாறை மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்து வருவதுடன் சில இடங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது.

இந்த மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும் வயல் நிலங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சவளக்கடை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பெரும்போக வேளாண்மை செய்கை நிலங்களில் 2000 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சவளக்கடை, அன்னமலை, வேப்பயடி, 5ஆம் கொலனி போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த மழைவீழ்ச்சி காரணமாக சில குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது வேளாண்மைக்கு 70 நாள்களே கொண்ட பயிர்களாக குடலைப் பருவத்தில் இருந்து கதிர் பருவத்துக்கு மாறும் இவ்வேளையில் மழை வீழ்ச்சி அதிகரிப்பு மற்றும் குளங்களிலிருந்தும் நீர் திறந்து விடப்பட்டமை முதலிய காரணங்களால் இப்பயிர்கள் நாசமாகி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தால் தாம் அதிகளவில் பாதிக்கப்பட்டு மீண்டெழ முடியாத நிலையில் இருக்கும் வேளையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அடுத்தொரு வெள்ள நிலைமை ஏற்பட்டு, அதனால் தாம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை, நெல்லுக்கான உத்தரவாத விலை இன்னும் நிர்ணயிக்கப்படாத நிலையில் தாம் எதிர்பார்த்த விளைச்சலை பெறுவதிலும் சிக்கல்கள் நிலவுவதாக விவசாயிகள் மேலும் ஆதங்கப்படுகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள்மயப்படுத்தும் நோக்கில் ஆர்ப்பாட்டத்துடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் நேற்று (வியாழக்கிழமை) யாழ். நகர்ப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளின்போது துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துக்களை உள்வாங்கல் போன்றவற்றை வேலையில்லாப்பட்டதாரிகளின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் முன்னெடுத்தனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கையானது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபி முன்றிலில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ். நகர்ப் பகுதிக்குள் பேரணியும் துண்டுப்பிரசுரம் வழங்கலும் தொடர்ந்து விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.






# ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுவர் ஜனாதிபதியின் செயலரோடு சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமெரி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (வியாழக்கிழமை) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக இந்த சந்திப்பில் தூதுவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தற்பொழுதுள்ள புதிய அரசியல் போக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமேரி , கடந்த காலங்களில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சுமார் 150,000 இலங்கையர்கள் பணியாற்றுவதாகவும் எதிர்காலத்தில் இந்த வேலை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தவும் இலங்கை நிபுணர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் காலித் நாசர் அல் ஆமேரி தெரிவித்தார்.

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த ஐக்கிய அரபு இராஜ்ஜியம் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் இது தொடர்பாக புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விரும்புவதாகவும் தூதர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜிய தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்த தூதுவர், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த இது வாய்ப்பாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.






உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# பெரியபுராணம்

**விஜயதர்ஷினி**

”பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ” என்று மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனாரால் பாராட்டும் படியாக காப்பியம் இயற்றியவர் சேக்கிழார் பெருமான். பெரிய புராணத்துள் பக்திச்சுவையுடன் பல்வேறு செய்திக்கூறுகளும் இழையோடக் காணமுடிகின்றது. காப்பியத்துள் தமிழ்ப்பற்று, வரலாற்று உண்மைகள் இல்லறக் கருத்துக்கள், வாழ்வியல் கூறுகள் இலக்கிய நயம் எனக் காப்பியம் முழுமையும் ஒரு கலைப் பெட்டகமாகவே அமைந்து விளங்குகின்றது. அவரது நோக்கம் பக்தியை மேம்படுத்தல் என்றாலும், கூர்ந்து நோக்கினால் பிற கருத்துக்களையும் அதனுள் காணமுடிகின்றது. மேலும் தெய்வச் சேக்கிழரால் படைக்கப்பட்ட ஒப்பற்ற கருவூலம் பெரியபுராணம்.

இறைவனே அடி எடுத்துக்கொடுத்து தோன்றாத்துணையாக இருந்து உள்ளிருந்து உணர்த்த சேக்கிழரால் பாடப்பட்ட நூல் பெரியபுராணம். சிவபெருமானையும் அவரைப் பூசிக்கும் முறைகளையும் அதனால் ஏற்படும் பலன்களையும் தொண்டின் சிறப்பையும் அடியார்களின் பெருமைகளையும் விரித்துக்கூறும் ஞானப் பெட்டகமே பெரியபுராணம் ஆகும்.

நாட்டில் ஏற்பட்ட வறுமை, பஞசம் நீதிமன்ற நடவடிக்கைகள், ஆட்சி, காட்சி, ஆவணம் என்ற அடிப்படையில் நீதி வழங்கியமை, சைவர்கள் நடத்திய திருமணமுறைகள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் பெரியபுராணம் ’அறுபத்து மூவர் வரலாற்றையே கூறும் என்றாலும் அவர்தம் சரிதம், தமிழ்நாட்டுச் சமுதாய வரலாறு ஆகியவற்றுடன் தமிழ்நாட்டு வரலாறு என மூன்றையும் குறிப்பிட்ட அளவில் கலந்து படைக்கப்பட்டது’ எனக் குறிப்பிட்டுள்ளார். அது சேக்கிழார் பெருமானின் புலமைத் திறத்தைக் காட்டுகின்றது.பெரிய புராணம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தாலும் அதனுள் பௌராணிகத்தையும் காணலாம்.

வரலாற்றுக் குறிப்புகள் மிகுந்த வரலாற்று நூல் எனினும் மிகை இல்லை. என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே என்று சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த திருமூலர் கூறுவார். மனிதனைக் கடவுள் படைத்ததன் நோக்கமே அவனைத் தெரிந்து அறிந்து தமிழில் புகழ்ந்து இலக்கியச் சுவையோடு போற்றவேண்டும் என்பதுதான் பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர். காலம் செல்லச் செல்ல தமிழ் மொழியையும் இறைமையையும் ஒன்றாகவே கருதி பல இலக்கியங்களை தெய்வீக உணர்வோடு பலரும் இயற்றினர். அறிதல், உணர்தல், செய்தல் ஆகிய இம்மூன்றும் சேர்ந்ததுதான் ’மனம்’ என்றும் அறிதல் இயற்றமிழிலும், உணர்தல் இசைத்தமிழிலும், செய்தல் நாடகத் தமிழிலும் அடங்கும் என்றும், எனவே முத்தமிழ் இயல்பாகவே மனச்செம்மைக்கு வழிவகுக்கும் என்றும் தமிழர்கள் வாழ்வில் கொண்டு வாழ்ந்து வந்தனர். எந்தப் பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அந்தபபொருளின் உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதனை ’எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். உண்மையான அறிவையே திருவள்ளுவர் மெய்ப்பொருள் என்கிறார். இந்த மெய்யுணர்வை சேக்கிழாரும் தனது பெரியபுராணத்தில் கூறுகின்றார்.

மேலும் பெரியபுராணத்தில் இசை பற்றி கூறவும் தவறவில்லை. இசை பற்றிய அரிய செய்திகளை பெரியபுராணம் தன்னகத்தே கொண்டுள்ளது.’இசை விளங்கிட இயல்பினில் பாடி நின்றேத்தி’, என்று சேக்கிழார் கூறுகிறார். இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பெரியபுராணம் கூறும் வாழ்வியல் நெறிகளுக்கு சிறந்த ஒரு உதாரணமாக,

1. மக்கள் அன்புடனும் ஒழுக்கமுடனும் பணிவுடனும் பக்தியுடனும் வாழ வேண்டும் மனித வாழ்வு நிலையானதல்ல என்ற உணர்வும் வேண்டும். இவை எல்லா நாயன்மார்கள் வாழ்விலும் காணக்கூடிய நீதிகள்

2. உயிர்கள் நேயம் வேண்டும் என்பதை (121,1223,1228) என்ற பாடல்களிலும் ஆழ்பவர்களின் கடமைகள்(121) தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் (216) போன்ற பாடல்களிலும் காணலாம். இவற்றின் மூலம் பெரியபுராணம் கூறும் வாழ்வியல் நெறிகள் ஆகும். பெரிய புராணச் சிறப்புகளில் மகளீர் பற்றிக்கூறவும் தவறவில்லை என்றே கூற வேண்டும். அதாவது சேக்கிழார் படைத்துக்காட்டும் மங்கையர் திலகங்கள் ’பெண்ணிற் பெருந்தக்கயாவுள’ என்ற வினாவுக்கு விளக்கம் கூற வந்த பாத்திரங்களாவார். ஆடவர் தடம் புரண்டாலும் மங்கையம் தடம் புரளாது நெறியில் நின்று ஒழுகி வாய்மை வரலாற்றை வயம்படுத்தியிருக்கிறார்கள்

ஆன்மீகத் துறையில் ஈடும் பெண்களுக்கு உரிமையில்லை என்ற அக்கால நிலையை மாற்றுகிறார் சேக்கிழார். அடுப்பூதும் மங்கை ஆண்டவனைப்பாடி அவன் அருளில் கலந்த செய்தியைக் கூறுகின்றார். காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து கைலாயம் சென்றபோது இறைவன் ’அம்மை’ என்று அவரை அழைத்ததாகக் கூறும் சேக்கிழார் பெண்குலத்தையே பெருமைப்படுத்துகின்றார்.

இயற்பகைநாயனார் மனைவியை மெய்த்தவர் (இறைவன்) கேட்டவாறே கொடுத்தனன் என்று கூறியபோது அம்மையார் கலங்கி மனந்தெளிந்து பின் ’நீர் உரைத்தது ஒன்றை நான் செயும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு’ என்று கூறி வணங்கினாள் என்றும் அவளைத் ’திருவினும் பெரியாள்’ என்றும் குறிப்பிட்டு இலக்குமியைவிடப் பெரியவள் என்று அவள் கற்புத்திறனை சேக்கிழார் விளக்குகிறார்.

அத்துடன் இல்லறத்தின் சிறப்பினையும் அழகாக எடுத்துக் கூறுகிறார்.’வையகம் போற்றும் செய்கை மனை அறம்புரிந்து வாழ்வோர்’ என்று திருநீலகண்டர் வரலாற்றில் விளக்குகின்றார். மேலும் சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையாய் அரும்பி நம்பியாண்ட நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியாய் மலர்ந்து பின்னர் சேக்கிழரால் திருத்தொண்டர் புராணமாகக் கனிந்து பழுத்த காவியமே பெரியபுராணம் ஆகும்.

’செயற்பால தோரு மறனே: ஒருவற் குயற்பால தோரும் பழி’ என்றார் வள்ளுவப் பெருமானார். அறம் என்பது நல்வினை அறஞ்செய்தல் என்பது நல்வினையை ஆற்றுதல். மாந்தர் யாவரும் நல்வினையை செய்ய விரும்புதல்வேண்டும் என்பது ஔவையாரின் கட்டளையாகும். ஆகவே அவர் ’அறஞ்செய்ய விரும்பு’ என்று அருளினார். தமிழ் நூல்களில் இக்கருத்து பல நிலைகளில் வற்புறுத்துப்பட்டன. சமுதாயச்சூழலில் எழுந்த நூல்களில் சமயச்சார்புடன் அமைந்த நூல்களில் இது மிகவாக எடுத்துப் பேசப்படுகின்றது.

பெரியபுராணம் வரலாறு, இலக்கியம், இலக்கணம், சமய சாத்திரங்கள், இவற்றை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்ட பெருங்காவியம் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய தமிழ்நாட்டுக் காவியங்கட்குப் பல நூற்றாண்டுகளுக்குப்பிறகுதமிழ்நாட்டுமக்களைப் பற்றி எழுந்த காவியம் பெரியபுராணம் என்பர். பலர் பொருட்செல்வம் பெற்ற அடியார்கள் நல்ல வழிகளில் அப்பொருளை நல்ல வழிகளில் ஈட்டியவர்கள் ஈட்டிய பொருளை அவர்கள் அறத்தை வளர்க்கவே பயன்னடுத்தினார். பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் அறத்தை தம் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினார். காலத்தையும் இடத்தையும் கடந்த நிலையிலும் ஒல்லும் வகையான் எல்லாம் பிறருக்கு உள்ளத்தாலும் உரையாலும் செயலாளலும் நன்மை செய்வதையே அறத்தின் பொதுநிலை எனக்கொண்டு இவர்கள் ஒழுகினர் இவையே பெரியபுராணம் காட்டும் அறச்செயல்கள் ஆகும்.

சைவத் திருமுறைகளில் 12 ஆம் திருமுறையாக அமையும் பெரியபுராணம் மிகச்சிறந்த காப்பியமாகவும் உள்ளது. ஆதன் பக்திச்சுவை வாசகரையும் கேட்போரையும் இறைவனடியார்கள் பக்தி அனுபவத்தில் திளைக்க வைக்கும் தன்மை உடையது. உணர்ச்சியை மையமாகக் கொண்ட காவியங்களில் கதாபாத்திரங்களினால் வெளிப்படுத்துப்படும் உணர்ச்சிகள் வாசகரை அல்லது பார்வையாளர்களை சென்றடைந்து அவர்களது உள்ளத்தில் உறை நிலையில் உள்ள உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களும் அத்தகைய அனுபவத்தைப் பெறுவதற்கு உதவுகின்றது. புக்தி அனுபவமானது அத்தகைய காவியங்களில் மக்கள் ஈடுபாடு கொண்டு அவற்றை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதுடன் மக்கள் சமய அறிவு பெறவும் புலனடக்கம் தியானம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடவும் வழிவகுக்கின்றது.

உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மன ஒருமைப்பாட்டுடனும் தூய்மையுடனும் சமய அனுட்டானங்கள் வழிபாடு கிரியைகளில் ஈடுபடவும் சமயத் தொண்டு புரியவும் ஆர்வத்தைத் தூண்டுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் யாவும் இறுதியில் ஆன்மீக ஈடேற்றத்தை பெறுவதற்குரிய சாதனங்களாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.இவ்வாறு வீடுபேற்றினை அடைந்த திருத்தொண்டர்களின் வரலாற்றை பக்திச்சுவை மிக்க காப்பியமாக வடித்து மக்களுக்கு அளித்த சேக்கிழாரின் சமயப்பணி என்றும் நினைவு கூறத்தக்கது.--

காலைக்கதிர் Kalaikkathir

# மருதமுனை கடற்கரை பகுதிகளில் கடலரிப்பினால் மீனவர்கள் பாதிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை கடற்பிரதேசத்தில் டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது.



நேற்;று மாலை கரையொதுங்கிய குறித்த மீனை அப்பகுதி சிறுவர்கள் பிடித்து மீண்டும் கடலில் விடுவதை காண முடிந்தது.

குறித்த மீன் சுமார் 4 முதல் 5 அடி வரையான நீளம்கொண்டதுடன்இப்பகுதியில்ஏற்பட்டுள்ள கடல்கொந்தளிப்பால்கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த மீனை காண்பதற்கு அப்பகுதிமக்கள்வருகைதந்தவண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தவிர ஏற்கனவே அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பெரியநீலாவணை பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் கடலாமைகள் டொல்பின் மீனினம் என பலவகை கடல்வாழ் உயிரினங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரை ஒதுங்கி இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் மருதமுனை கடற்கரை பகுதிகள் விரைவாக கடலரிப்பிற்கு உள்ளாகி வருகின்றன. இப்பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பு காரணமாக தோணிகள் வள்ளங்கள் கரையை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன. மேலும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசங்களில்காற்றின்வேகம்அதிகரிப்பு காற்றின் திசை மாற்றம் நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள திசை மாற்றம் கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாககாணப்படுகின்ற காரணங்களால்கடல்அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதினாலும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.



# நான்கு வயதுப் பிள்ளையுடன் நீர்த்தேக்கத்தில் பாய்ந்த தாய்

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் 4 வயது குழந்தையுடன் தாய் ஒருவர் 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் குதித்துள்ளார்.

இதன் போது தாய் உயிருடன் மீட்கப்பட்டுள்ள போதிலும், 4 வயது பிள்ளையைத் தேடும் பணி தொடர்கின்றது.

அக்கரபத்தனை எல்பியன் தோட்டத்தை பிறப்பிடமாக கொண்ட இப்பெண் தலவாக்கலை தெவிசிரிபுற பிரதேசத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

கனவனை விட்டு 7 வருடங்களாக பிரிந்து இன்னொருவருடன் வாழ்ந்து வந்த இவர், தனது குழந்தையுடன் நீர்த்தேக்கத்தில் குதித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பெண் நீர்த்தேக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்ததை பார்த்த பிரதேச மக்கள் அவரைக் காப்பாற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மீட்கப்பட்ட தாய் சிகிச்சைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கை பிரதமரிடம்





ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு தொடர்பான இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினர் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கையளித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோரினால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கண்காணிப்பு இறுதி அறிக்கை நேற்று (வியாழக்கிழமை) பிரதமரிடம் கையளிப்பட்டது.

எதிர்காலத் தேர்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான முக்கிய பரிந்துரைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான எதிர்காலநடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பு துறைமுக நகரக் கடலினுள் மூழ்கிய சிறுவனும் இளைஞனும் மீட்பு

கொழும்பு துறைமுக நகர கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தசிறுவனும்இளைஞனும் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

13 வயதுடைய சிறுவனும் 19 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று கொழும்பு துறைமுக நகர கடலில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் சிறுவனையும் இளைஞனையும் காப்பாற்றி அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# காத்தான்குடியில் பூட்டப்பட்ட வீட்டினுள்ளே பொது சுகாதார பரிசோதகரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி கலைமகள் வீதியில் உள்ள பூட்டப்பட்டிருந்த வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த சடலம் பொது சுகாதார பரிசோதகர் ஒருவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மிச் நகர் பொது சுகாதார பரிசோதகராக கடமையாற்றியவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



பூட்டப்பட்ட வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதை உணர்ந்த அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சொகோ தடயவியல் பொலிஸார், காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மதுபானசாலைகள் அனுமதி விவகாரம்: உண்மைகளை உடன் வெளியிடுங்கள்;

## இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள்தான் என சுமந்திரன் அரசுக்கு எச்சரிக்கை



மதுபானசாலைகளுக்கான அனுமதி விவகாரம் தொடர்பான உண்மைகளை உடன் வெளியிடுங்கள். இல்லையேல், நீங்களும் ஊழல்வாதிகள்தான் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

உடுப்பிட்டி மதுபானசாலை ஏன் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகிறது.

நாட்டில் அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதிகரித்த மதுபான பாவனையால் புதன்கிழமையும் பருத்தித்துறையில் வாள்வெட்டு, கத்திக்குத்து இடம்பெற்றுள்ளன.

மன்னாரில் நேற்று நீதிமன்றின் முன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

இலஞ்சத்தை ஒழிப்போம், மதுபானசாலைகளுக்கான அனுமதி விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் இலஞ்சத்துக்கு துணை போனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுகிறோம், முடிந்தால் மதுபானசாலைகளுக்கான அனுமதி தொடர்பான உண்மைகளை உடன் வெளியிடுங்கள். இல்லையேல், நீங்களும் ஊழல்வாதிகள்தான்.

இலங்கை விடயம் சம்பந்தமாக தி.மு.க கனிமொழியை சந்தித்து கலந்துரையாடினோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது.

இலங்கை தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகிறது. அவ்வாறு தேவையில்லை. ஏற்கனவே இணங்கிக்கொண்ட விடயம். எனவே இவ்வளவு காலம் தேவையில்லை. காலத்தை இழுத்தடிப்பது அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம்.

தமிழ் அரசு தலைமை தொடர்பிலும் புதிய அரசமைப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ச.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் பேச வருகிற விடயம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி மத்திய குழு கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம் என்று சுமந்திரன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு தாந்தாமலை பகுதியில் உயிரிழந்த நிலையில் யானை மீட்பு

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை பகுதியில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தாந்தாமலை பொலிஸ் காவலரனுக்கு பின்னால் உள்ள வாய்க்கால் பகுதியிலே உயிரிழந்த நிலையில் இந்த யானை மீட்கப்பட்டுள்ளது.

இவ் யானைக்கு சுமார் 30 தொடக்கம் 35 வயது இருக்கும் எனவும் வயல் பகுதிக்குள் சேதுமாக்கிய பின்னரே இந்த யானை இறந்திருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து குறித்த பகுதிக்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வந்து பார்வையிட்டதன் பின்னர் யானையின் உயிரிழப்பு தொடர்பாக கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கால்நடை வைத்தியர்கள் இறந்த யானையை பரிசோதனை செய்த பின்னர் அதனை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

யானை உயிரிழந்ததற்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் கால்நடை வைத்திய பிரிவின் பரிசோதனைக்கு பின்னரே இறப்புக்கான காரணம் தெரியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



# மூன்று வெளிநாட்டுப் பிரஜைகள் நாரிகம கடலில் மூழ்கிபின் மீட்பு

காலி, ஹிக்கடுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாரிகம கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மூன்று வெளிநாட்டுப் பிரஜைகள் ஹிக்கடுவை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

25, 27 மற்றும் 48 வயதுடைய ரஷ்யப் பிரஜையும் இரண்டு சீனப் பிரஜைகளுமே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுப் பிரஜைகள் மூவரும் புதன்கிழமை நாரிகம கடலில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளனர்.

இதனை அவதானித்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளையும் காப்பாற்றி அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர்.




# சிறீதரன் எம்.பி. முடிந்தால் ஸ்டாலினுடன் பேசி மீனவர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கட்டும்

## யாழ். மீனவர் அமைப்பு சவால்

முடிந்தால் கிளிநொச்சியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், தமிழக முதலமைச்சருடன் கதைப்பதற்கு நேரத்தினைப் பெற்று, அவருடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கட்டும், அதன் பின்னர் நாங்கள் அவரது செயற்பாடுகளை வரவேற்கின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் பிரான்சிஸ் ரட்ணகுமார் சவால் விடுத்துள்ளார்.

நேற்றுசம்மேளனத்தின்யாழ்ப்பாணஅலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது எமது கடற்தொழில் அமைச்சராக உள்ள சந்திரசேகரன் அவர்களுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுடன் கதைப்பதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்கள் அதனை சரியாகப் பயன்படுத்தவில்லை.

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கு இருந்த போதே இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளை முதலமைச்சரிடம் எடுத்துக் கூறாமல் இங்கு வந்தபின்னர், முதலமைச்சருடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி தருமாறு தான் கேட்டுள்ளதாகவும், மீனவர்களின்பிரச்சினைகளைகதைக்கப்போவதாகவும் கூறுகின்றார். இதெல்லாம் பகட்டுக்கும், எதிர்காலத்தில் மீனவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவும் கூறுகின்றார்.

இந்தியாவில் தேர்தல் நெருங்குகின்றது. தேர்தல் காலத்தில் உங்களுக்கு நேரம் ஒதுக்கி தர மாட்டார்கள். இயலும் என்றால் நீங்கள் நேரத்தினை பெற்று நமது மீனவர்களின் பிரச்சினை குறித்து பேசித் தீருங்கள், அதற்கு பின்னர் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கதைப்பதற்கு, கடந்த காலத்தில் கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை முன்வைத்தோம். இதன்போது அவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கனிமொழி ஆகியோரிடம் இது குறித்து தெரிவித்தார். இருப்பினும் எமக்கான நேரம் வழங்கப்படவில்லை. அப்படி எமக்கு நேரம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் எமது பிரச்சினைகளை நேரடியாகவே எடுத்துக்கூறி இருப்போம். - என்றார்.




# மல்லாவியில் புதனன்று மோ.சைக்கிள் தீக்கிரை

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி கல்விளான் பகுதியில் வயல் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கல்விளான் பகுதியில் வயற்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிசெய்வதற்கான முயற்சியை இலங்கைத் தமிழர்களுக்காக தொடர்வோம்

## பிரிட்டன் பொங்கல் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதி

இலங்கையில் தமிழர்களிற்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிசெய்வதற்கான முயற்சிகளை தொடர்வோம்-என பிரிட்டனில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

பிரிட்டனின் தமிழ்மக்கள் வெஸ்ட்மினிஸ்டரில் தைப்பொங்கல் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

பரதநாட்டியம் கர்நாடக இசை என தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரிட்டனின் அனைத்துகட்சி களையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழர்களிற்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிசெய்வதற்கான முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபடப்போவதாக தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரிட்டனின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் -

பிரிட்டனின் சுகாதார துறை, கல்வி, வர்த்தகம் கலை மற்றும் அரசியல் ஆகியவற்றிற்கு தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப்பிற்காக அவர்களிற்கு தனது நன்றியை தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கங்களால் வேதனைக்கும் துயரத்திற்கும் உட்பட்ட நீண்ட வரலாறு தமிழர்களிற்குள்ளபோதிலும் அவர்கள் லண்டனிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் செழிப்பாக உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இலங்கை ஐக்கியநாடுகளின் பொறிமுறைகளை தொடர்ந்தும் நிராகரித்துவருவதால் தமிழ் மக்களிற்கு நீதி மறுக்கப்படுகின்றது என குறிப்பிட்டுள்ள அவர், வெளிவிவகார குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் சமீபத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என வெளிவிவகார அமைச்சரிற்கு அழுத்தம் கொடுத்ததாக குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரிட்டனின் சுகாதாரம் மற்றும் சமூகநல இராஜாங்க அமைச்சர் வெஸ்ஸ்ரீட்டிங், பிரித்தானியாவின் கலாசாரம் மற்றும் பொருளாதாரத்திற்கு தமிழ் மக்கள் வழங்கிய பங்களிப்பிற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி உண்மை பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படுவதை உறுதி செய்வது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

நான் இலங்கையின் அனைத்து மக்களினதும் நல்லிணக்கம், உண்மை நீதிக்காக எனது குரலை பயன்படுத்த முனைந்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.

உங்கள் பரப்புரையும் பிரச்சாரங்களும் பிரிட்டனின் நாடாளுமன்றத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலிலும் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையிலும் இலங்கையின் மனித உரிமை விவகாரத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவியுள்ளது என குறிப்பிட்ட அவர், இங்கெல்லாம் எங்களின் கட்சிகளின் உறுப்பினர்கள் இலங்கையின் மனித உரிமைக்காக குரல்கொடுத்துள்ளனர்- யுத்த காலத்தில் மிக மோசமான அநீதிகளை இழைத்தவர்களை பொறுப்புக்கூறலில் ஈடுபடுத்தவேண்டும் என்பதற்காக குரல்;கொடுத்துள்ளனர் என வெஸ்ஸ்ரீட்டிங் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் கடும் உழைப்பு மற்றும் குடும்பவாழ்க்கைக்காக பிரிட்டனில் பெரிதும் வரவேற்கப்படுகின்றனர் என பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் இயன் டங்கன் ஸ்மித் தெரிவித்தார்.

மக்னிட்ஸ்கி தடைகளிற்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் சமூகத்தை அச்சத்திற்குட்படுத்திய, துஸ்பிரயோகங்கள், கொலைகளில் ஈடுபட்ட அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்போகின்றோம். அவர்களிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்குமாறு தடைகளை விதிக்குமாறு ஒவ்வொருநாளும் நாங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்கப்போகின்றோம். - எனத் தெரிவித்தார்.

தைப்பொங்கல் கொண்டாடுவதற்கான ஒரு தருணம் மாத்திரமில்லை இலங்கையி;ல் சமாதானம் நீதிக்காக தொடரும் போராட்டங்களை நினைவுகூரும் தருணம் எனத் தெரிவித்த பிரிட்டனின் தமிழர்களிற்கான







அனைத்துகட்சி நாடாளுமன்ற குழுவின் தலைவர் சியோபைன் மெக்டொனாக் எங்கள் சகாக்கள் கனடா அமெரிக்கா செய்தது போன்று பிரிட்டனும் சுதந்திரமாக திரியும் யுத்த குற்றவாளிகளிற்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டும் என தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2025இல் வெளியிடப்பெற்றது